# Thamizhar Vazhvil Vainavam

**Dr. H. Malarvizhi**
*Associate Professor, Department of Tamil*
*Thiruthangal Nadar College, Chennai*

**Abstract**

*Tamil life had attained prosperity more than 2,000 years ago. Their way of life was framed not only as a right for humankind but also as one that embraced all living beings. There have been some among the Tamils who, understanding the true essence of this noble way of life, have sought to convey it to the world so that all may live in happiness. Among the religions evolved and practiced by such Tamils, Saivism and Vaishnavism are the most ancient. The religion that worships Lord Siva as the Supreme Deity is known as Saivism. Likewise, the religion that worships Vishnu, known as Thirumal, as the Supreme Deity is called Vaishnavism. The credit for systematizing these two religious doctrines into philosophical systems belongs to the Tamil people. Based on the philosophical principles of Saivism, Meykandar formulated the philosophical system known as Saiva Siddhanta. Similarly, Ramanuja, taking as his foundation the Nalayira Divya Prabandham—the collection of the sacred hymns of the Alvars—formulated the philosophical doctrine called Vishishtadvaita. An ancient saying that explains the nature of God is, "He exists in the pillar and He exists in the speck." The Tolkappiyam, the ancient Tamil grammatical treatise, states "Māyōn mēya kāḍurai ulagam," which indicates that the worship of Thirumal was practiced by the ancient Tamils. The term Māyōn refers to Thirumal of dark complexion. Thirumal is regarded as the primal deity of the Vedas. Vaishnavism is founded on the three fundamental principles of the soul (ātma), matter, and God (Īśvara). It stands as a rich treasury of the Tamil people's religion, art, literature, culture, and way of life.*

***Keywords:*** *Sidhu - soul, Asidhu - substance, Eeswaran - God, Mayon - the dark-skinned Lord, Andam - the world, Sagalam - everything, Azhi - the ocean, Nayam - beauty, grace, Soul liberation - liberati*

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஜனவரி**

**வருடம்: 2026**

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18358401

**References**

1. Source and text of the poem A. P. Palayan Kaura, Publishing House
2. Paribadal Moulana and Puliyur Kesian, Text Saran Books, Chennai.
3. Source and text of the publication, V. T. Ramasubramaniam, Thirumagal Nilayam, Visa Publications
4. Vaishnavism in life N. Venugopal Pari Institute Chennai.
5. Silappathikaram Puliyur Keshikan with explanation, Pari Nilayam Chennai.
6. Tamil Civilization and Culture, Dr.A, Dakshinamoorthy, Ainthinai Publishing House, Chennai.

# தமிழர் வாழ்வில் வைணவம்

***முனைவர் அ. மலர்விழி***
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
திருத்தங்கல் நாடார் கல்லூரி, சென்னை

***ஆய்வுச் சுருக்கம்***

*தமிழர் வாழ்வு 2000 ஆண்டுகளுக்கு முன்பே வளம் பெற்ற ஒன்று. அவர்களது வாழ்க்கை உலகில் வாழும் மனித இனத்துக்கு மட்டுமின்றி உயிரினம் அனைத்திற்கும் உரிமையாக அமைந்தவை எல்லாரும் இன்புற்று இருக்க நினைக்கும் தமிழர் தம் வாழ்வியலை உண்மை நலத்தை உணர்ந்து உலகுக்கு உணர்த்துபவர்கள் சிலர். அத்தகைய தமிழர் கண்ட சமயங்களில் தொன்மையானவை சைவமும் வைணவம் ஆகும்.சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுகின்ற சமயம் சைவ சமயமாகும். அது போன்று திருமால் எனப்படும் விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் வைணவ சமயம் ஆகும்.இந்த இரண்டு சமய கோட்பாடுகளையும் தத்துவ சிந்தனைகளாக வகுத்து கண்ட பெருமையும் தமிழினத்திற்குரியது. சைவ சமய கோட்பாட்டு சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு மெய்கண்டார் சைவ சித்தாந்தம் என்னும் தத்துவ நெறியை வகுத்தார்.அதுபோல ராமானுஜர் ஆழ்வார்களின் அருட்பாடல்களின் தொகுப்பாகிய நாலாயிர திவ்ய பிரபந்தத்தை அடிப்படையாகக் கொண்டு விசி ஷ்டாத்துவைதம் என்னும் தத்துவ நெறியை வகுத்தார். இறைவன் என்னும் பொருளை விளக்க எழுந்த பழமொழியே தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான் என்பதாகும். மாயோன் மேய காடுறை உலகம் என்று தமிழின் தொன்மை நூலாகிய தொல்காப்பியம் கூறுவதால் திருமால் வழிபாடு பழம் தமிழர் வழிபாடு என்பது விளங்கும். மாயோன் என்பது கரிய நிறமுடைய திருமாலை குறிக்கும். திருமால் வேத முதல்வனாக விளங்குகின்றான். ஆன்மா, பொருள், ஈஸ்வரன் ஆகிய மூன்று தத்துவங்களையும் அடிப்படையாகக் கொண்டது வைணவம்.இது தமிழர்களின் சமயம்,கலை,இலக்கியம்,பண்பாடு மற்றும் வாழ்வியல் கருவூலமாக திகழ்கிறது.*

*சித்து –ஆன்மா, அசித்து – பொருள், ஈசுவரன் – இறைவன், மாயோன் –கரிய நிறமுடைய திருமால், அண்டம் – உலகம், சகலம் – எல்லாம், ஆழி – கடல், நயம் – அழகு, எழில், ஆன்மா விடுதலை –மோட்சம்*

**முன்னுரை**

உலகின் தொன்மையான மொழி தமிழ் மொழி. கல் தோன்றி மண் தோன்றா காலத்தை வாளோடு முன் தோன்றிய மூத்த குடி நம் தமிழ்குடி.அத்தகைய தமிழர்களின் வாழ்வில் திருமாலை முழுமுதற் கடவுளாக வழிபட்ட சமயம் வைணவம். பக்தி மார்க்கத்தின் மூலம் இறைவனை அடைவதை முக்கிய நோக்கமாக கொண்ட சமயம் வைணவம். இது உலக நலனுக்காக விஷ்ணு அவதாரம் எடுப்பார் என்ற நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. திருமால் விஷ்ணு, நாராயணன், மாதவன் போன்ற பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றார் அவரே பரம்பொருள் என நம்பப்படுகின்றார்.

உலகில் தீமைகள் அதிகரிக்கும் போது விஷ்ணு பல அவதாரங்கள் எடுப்பார். மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனன், பரசுராமன், ராமன், பலராமன், கிருஷ்ணன், கல்கி ஆகியவை குறிப்பிடத்தக்க அவதாரங்கள். இறைவனிடம் முழுமையான அன்பு மற்றும் சரணடைவதின் மூலம் ஆன்மா விடுதலை அடையலாம் என்பது தமிழர் வாழ்வின் அடிப்படை போதனையாக இருந்தது.

பக்தி இயக்கத்தின் மூலம் தமிழ் மொழியையும் தமிழர்களின் வாழ்வில் ஆன்மீகத்தையும் வளர்க்க ஆழ்வார்களும் ஆச்சாரியார்களும் இலக்கியங்களின் பங்களிப்பும் முக்கிய பங்கினை வகுத்துள்ளதை விளக்குவததே கட்டுரையின் நோக்கமாகும்.

### சங்க இலக்கியங்களில் வைணவம்

சங்க இலக்கியங்களில் வைணவ வழிபாடு ஆழமாக வேரூன்றி உள்ளது. நற்றிணை, புறநானூறு, பரிபாடல்,பதிற்றுப்பத்து,போன்ற நூல்களில் மாயோன் மால் நெடுமால் என பல பெயர்களில் குறிப்பாக முல்லை நிலத்தின் திணை கடவுளாக நீல வண்ணத்தோடு கருட கொடியுடன் போற்றப்படுகிறார் திருமால்.

### நற்றிணையில் திருமால்

நற்றிணையில் திருமால் முல்லை நில கடவுளாகவும், நீல நிறத்தவராகவும், உலகை காப்பவராகவும் போற்றப்படுகிறார். அசுரர்களால் மறைக்கப்பட்ட சூரியனை மீட்டு உலகை காக்கும் செயல்களும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன.

திருமால் வேதமுதல்வன் மாநிலமே அவன் சேவடி, கடலே அவனது ஆடை, ஆகாயம் அவன் உடல், திசைகள் அவன் கைகள், சூரியனும் சந்திரனும் அவன் கண்கள், இயன்ற அனைத்தையும் உள்ளடக்கிய இயல்புடையவன் என்று நற்றிணை கடவுள் வாழ்த்து பாடல் கூறுகின்றது. இதன் மூலம் திருமாலிடம் மக்கள் கொண்டிருந்த பக்தியையும், அவரைப் போற்றும் முறைகளையும், பண்புகளையும், நம்பிக்கைகளையும் அறிய முடிகின்றது.

### புறநானூற்றில் திருமால்

புறநானூற்றில் திருமால் மாயோன், கண்ணன் என பல பெயர்களில் குறிக்கப்படுகின்றார். நீல நிற மேனியுடன் கருட கொடியுடனும் பூவை போன்ற வண்ணத்துடனும் அசுரர்களை அழித்து துன்பம் தீர்ப்பவராகவும், கிருஷ்ண-பலராமனராகவும் சித்தரிக்கப்படுகின்றார்.மேலும் மன்னர்களின் வீரத்திற்கும் புகழுக்கும் உவமையாக பயன்படுத்தப்படுகின்றார். (புறநானூறு56)

அசுரர்கள் மறைத்த சூரியனை மீட்டவன் மக்களின் துன்பத்தை தீர்ப்பவன் என்பதை,

**அனங்குடை யவுனர் கணங்கொண்டொளித்தெனச் சேண்**
**விளங்கு சிறப்பின் ஞாயிறு காணாது**

என்ற வரிகள் உணர்த்துகின்றன. திருமாலின் வீரத்தையும் பக்தியையும் அவனது வலிமையையும் மக்கள் மத்தியில் அவனுக்கு இருந்த முக்கியத்துவத்தையும் சங்க இலக்கிய புறநானூற்று பாடல் மூலம் வெளிப்படுத்து வதை உணரலாம்.

### பதிற்றுப்பத்தில் திருமால்

திருமாலை வர்ணிக்கும் போது அணி, மணி, மாலைகள் அணிந்தவனாக போற்றுகின்றது பதிற்றுப்பத்து. மாதவன் மார்பிரை மலரவட்கு ஏது பெருமை அவனுரையும் இடம் அலங்காரமாகவும் நறுமணம் கமழும் இடமாகவும் இருக்க வேண்டும் என்பதை தமிழர்கள் உணர்ந்து திருமாலின் மார்பை அலங்கரிக்க அணிகள், வாச மிகு மாலைகளை மாயவனுக்கு சூட்டியுள்ளனர். இதனை,

**வண்டூது பொலிதார் திருஞெமர் அகலத்து**
**கண் பொரு திகிரி கமழ் தூழாஅய் அலங்கர்**
**செவ்வன் சேவடி பரவி (பதிற்றுப்பத்து-31)**

எனக் கூறுகிறது.

### பரிபாடலில் திருமால்

பரிபாடலில் திருமாலின் திருத்தலங்கள், அவதாரங்கள் அருள் திறம் செயல்கள் போன்ற செய்திகள் பொதிந்து கிடக்கின்றன. நீல நிறத்தோன் அங்கங்களின் அழகு சிறப்பும் அணிகள் மாலைகள் அணிந்திருப்பவன் சங்கு சக்கர படைகளை ஏந்தியவன், திருவுரை மார்பினன், பாம்பணையில் பள்ளி கொண்டவன், கருட கொடியோன் என திருமாலின் அங்க அழகினையும் சிறப்பினையும் புகழையும், தோற்றப் பொலிவினையும் அழகிய வர்ணனைகளோடு பரிபாடலில் விளக்கப்பட்டுள்ளது.

### பத்துப்பாட்டில் திருமால்

திருமால் நீல மணி போன்றவர். கருட கொடியை ஏந்தியவர். அவுணர்களை அழித்தவர். ஓணநாளில் பிறந்தவர். ஈரடியால் மூவுலகம் அளந்தவர். திருவினை மார்பில் கொண்டவர். காத்தல் தொழிலை செய்பவர். பாம்பணையில் துயில்பவர். ஆழியும் சங்கும் தரித்தவர். நான்முகனை தன் உந்தியில் தோற்றுவித்தவர். என பெரும்பாணாற்றுப்படை, மதுரை காஞ்சி, திருமுருகாற்றுப்படை ஆகியவற்றில் கூறப்பட்டுள்ளது.

சங்க காலம் தொட்டு இன்றைய காலம் வரை தமிழர்களால் பின்பற்றக்கூடிய தெய்வ வழிபாடுகளில் திருமாலாகிய நாராயணனின் வழிபாடு முக்கியத்துவம் பெற்றதாக விளங்குகிறது. இருப்பினும் மாயோன் வழிபாடு சங்க கால தமிழர்களிடத்தும் இன்று வாழும் தமிழர்களிடத்தும் முக்கிய பங்கை பெற்றுள்ள தெய்வ வழிபாடாகவே உள்ளது.

### சிலப்பதிகாரத்தில் திருமால்

கோவலன் தோன்றிய காவிரி பூம்பட்டணத்தில் உள்ள கோயில்களில் நீலமேனி நெடியோன் என்று திருமாலை சிலப்பதிகாரம் குறிக்கிறது. நீல நிறத்தை உடையவன்,கருட கொடியை உடையவன் திருமால் என்று இதில் காட்டுகிறார் இளங்கோவடிகள்.

இந்திர விழாவின் போது ஆடிய 11 ஆட்டங்களில் மூன்று திருமால் ஆடிய ஆடல்கள். அவை 1.அல்லியம், 2.மற்கூத்து, 3. குடக்கூத்து என்பன ஆகும்.

கோவலன் கண்ணகி கவுந்தியடிகள் மூவரும் பூம்புகாரிலிருந்து புறப்பட்டு மதுரை செல்கின்றனர். திருச்சி அருகில் மாங்காட்டு மறையோன் என்பவனை சந்தித்து மதுரைக்குரிய வழி கேட்கின்றனர். அவர் திருவேங்கடத்தில் திருமால் நின்ற கோல காட்சியினை விளக்குகின்றார்.

ஆயிரம் தலை உடைய ஆதிகேசவனாகிய பாம்பு படுக்கையில் பலரும் வணங்கி தொழும் திருவரங்கத்தில் திருமால் பள்ளி கொண்டிருக்கின்றார் என இளங்கோவடிகள் வர்ணிக்கின்றார்.

திருமால் வாமன அவதாரத்தில் மூவுலகையும் ஈரடியால் அளந்தது,ராம அவதாரத்தில் தம்பியோட கானகம் சென்று இலங்கையை அளித்தது, கிருஷ்ண அவதாரத்தில் கம்சனை கொன்றது, பஞ்ச பாண்டவர்களுக்காக துரியோதனிடம் தூது சென்றது போன்ற செய்திகளைக் கூறி

திருமால் சீர் கேளாத செவி என்ன செவியே கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே கண்ணிமைத்து காண்பார்த்தம் கண் என்ன கண்ணே நாராயணா என்று எண்ணாத நாவென்ன நாவோஎன்று திருமால் வழிபாட்டினை அழுத்தமாக வலியுறுத்துகிறது சிலப்பதிகாரம்.

### வைணவ ஆச்சாரியர்கள்

வைணவ ஆச்சாரியார்களில் தனி சிறப்புக்குரியவர் இராமானுஜர் ஆவார். வேதாந்தசாரம், வேண்டாத சங்கிரதம், வேதாந்த தீபம், கீதைக்கு விளக்கம் ஆகியவை இவர் எழுதிய நூல்கள் ஆகும்.

ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒரு பொருளால் ஆனவை. ஜீவாத்மா பரமாத்மாவிலிருந்து வெளிப்பட்டது. எனினும் ஜீவன் பரம்பொருளுடன் மீண்டும் கலந்து விடுவதன் மூலம் பேரின்பம் அடைய முடியாது. பரமாத்மாவின் அருகில் இருப்பதின் மூலமே அது பேரின்பம் அடையும் என்கிறார். இவர் வைணவ வழிபாட்டு முறைகளை ஒழுங்கு படுத்தியவர். இவர் வைணவத்திற்கு பக்தி நெறியில் இடம் அளித்தவர். வைணவம் வடநாட்டில் பரவ இவரே வித்துட்டார் என்பார்.

### மத்துவாச்சாரியர்

வைணவ வரலாற்றில் சிறப்பிடம் பெறுபவர். ஆனந்த தீர்த்தர், பூரண பிரசன்னர் என்னும் பெயர்களும் இவருக்கு உண்டு. உயிரினங்கள் சில இறைவனை சேர்ந்துள்ளன சில நரகத்தில் இருக்கின்றன என்கிறார். மேலும் கடவுள் திருமால் திருமகள் என்றும் இரு உருவங்களிலும் உள்ளார் என்று கூறுகின்றார்.

**வல்லபாச்சாரியார்**

சுத்த அத்வைதம் என்னும் மதத்தை நிறுவினார். பக்தியே அறிவினும் சிறந்தது என்பார் இவர். கண்ணனுடன் கூடி என்றென்றும் இன்பம் துய்க்க விரும்பினார். இவ்வேட்கை சிற்றின்ப விளையாட்டாக மாறியது என்றார்.

**வைணவத் தமிழ்**

வைணவ சமயம் தமிழகத்திற்குத் தந்த இலக்கிய செல்வங்கள் ஆழ்வார்களின் பாசுரங்களாகும். பொய்கையாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார், மதுரகவியாழ்வார், திருமங்கை ஆழ்வார், குலசேகர ஆழ்வார், தொண்டரடி பொடியாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் என்னும் பன்னிருவரும் பாடிய பாடல்களின் தொகுதியே நாலாயிர திவ்ய பிரபந்தம் என்னும் பெயரால் வழங்கப்படுகிறது. இவை பல்லவர் காலத்து சமய நிலையே அறிய துணை நிற்கின்றன.

பெரியாழ்வாரின் பாடல்கள் பிள்ளைத் தமிழுக்கு வித்திட்டன. திருமங்கை ஆழ்வாரின் இரண்டு மடல்களும் தமிழுக்கு கிடைத்த புத்திலக்கியங்கள் ஆகும். ஆழ்வார்களின் பாடல்களில் காதல் சுவை ததும்பும் அழகு பாடல்கள் நிரம்பி உள்ளன. இராமாயணம் தோன்றுவதற்கு இவை அடிப்படையாக அமைந்தன என்பர்.

**ஆழ்வார்களின் காலம்**

பல்லவர்கள் காலத்தில் தமிழகத்தில் பக்தி இயக்கம் உருவானது. பன்னிரு ஆழ்வார்களும் திருமால் நெறயினை இன்னிசையோடு பரப்பினர். இவர்களின் 108 தலங்களையும் கண்டு பாடியவர் திருமங்கை மன்னர் ஆவார். ஆழ்வார்களின் பாடல்கள் திருமாலின் அவதார பெருமைகளை பலபடப் பாராட்டி பேசுகின்றன.

சிம்ம விஷ்ணு நரசிம்மவர்மன் போன்ற பல்லவப் பெருவேந்தர்கள் சிறந்த வைணவர்களாக இருந்து அச்சமயத்தை வளர்த்துள்ளனர். காஞ்சியில் வரதராஜ பெருமாள் கோயிலும் கடற்கரையில் தலசயனப் பெருமாள் கோயிலும் அமைத்தனர். வராகம் மண்டபம் போன்றவை திருமால் பற்றிய புராண செய்திகளை சித்தரிக்கின்றன. இவர்கள் வைணவ கோயில்களுக்கு நிலங்களையும் கொடுத்தனர்.

**ஆழ்வார் பாசுரங்களில் தத்துவம்**

ஆழ்வார்கள் தாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் இறைவனுக்குரிய தொண்டாகவே கருதினர். இறைவனுக்கு அருகில் இருப்பது வீடு பேற்றினும் மேலானது என்பார் நம்மாழ்வார். இறைவனுடைய தொண்டனாக இருப்பதே முக்தி என்பது அவருடைய கோட்பாடாக இருந்தது. மேலும், இறை எனப்படுவது திருமாலையே குறிக்கும். கண்களால் காணக் கூடிய கடவுளே திருமால்.அவர் எங்கும் எல்லா இடங்களிலும் எல்லா உருவத்திலும் நிறைந்துள்ளார். இவரே உண்மையிலும் உண்மையானவன். இவரை நாம் காணும் இடமெல்லாம் காண்பதே எல்லையற்ற இன்பம். விஷ்ணு என்னும் சொல்லுக்கு எங்கும் நிறைந்தவர் என்று பொருள்.உண்ணும் சோறு, பருகும் நீர், தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன் எம்பெருமான் என்று கண்ணீர் மல்கி கூறுகின்றார் நம்மாழ்வார்.

இத்தகு பக்தியே பெரியாழ்வாரிடம் தாய் மகன் உறவாக பரிணமித்தது. எனினும் நம்மாழ்வாரிடமும், திருமங்கை ஆழ்வாரிடமும் காதலன் காதலி உறவே தலை தூக்கி நிற்கின்றது. உண்மையான அன்பன் இறையிடம் தன்னை முழுவதும் ஒப்புவிக்கின்றான். அவன் இன்றி ஆன்மாவும் நிலைபேறில்லை.இதனைக் காட்ட நாயகன் நாயகி பாவம் நன்கு பயன்பட்டது. ஆழ்வார்களின்பாடல்கள்உணர்ச்சியைஉயிராக கொண்டவை. அவற்றில் அடிப்படையான தத்துவங்கள் விரவி கிடக்கின்றன. நம்மாழ்வார் ஆன்மா அழிவற்றது என்றும்,கடவுளுக்கும் ஆன்மாவுக்கும் இடையே உறவு உள்ளது என்றும், அது பிராணனையும் புலன்களையும் கடந்துள்ளது மனதையும் புத்தியையும் கடந்துள்ளது என்றும் கூறுகிறார்.

## முடிவுரை

நாராயணன் எனப்படும் திருமாலே முழுமுதற் பொருள் என கருதி அவனுடைய மந்திரங்களை மொழிந்து வழிபட்டு பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டு சரணாகதி அடைந்து நின்றால் திருமாலுக்கு பரமபதத்தின் தொண்டு செய்யும் பெரும் பேற்றினை அடையலாம் என்பதே வைணவம் உணர்த்தும் தத்துவ நெறியாகும். இத்தகைய பெரும் பேற்றினை அடைந்ததோடு மட்டுமன்றி அடையும் நெறியையும் வழியையும் காட்டிச் சென்ற பெருமக்கள் தான் ஆழ்வார்கள்.

சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம் போன்றவற்றில் வைணவ சமய நெறியின் முழுமுதற் பொருளாகிய திருமாலின் சிறப்பினை,நாராயணனாகவும்அவதாரமாகவும் கூறப்பட்டுள்ளது.நாராயணன் என்பது உலகை ஆக்கலும் அழித்தலும் நிலைபெறுத்தலும் ஆகிய உயர்ந்த நிலை. அவதாரம் என்பது அல்லலை அழித்து நல்லதை காத்து நம்மிடையே வெளிவந்த நிலை. இந்த இரு நிலைகளிலும் திருமாலை வழிபட்டு பண்டைய தமிழ் மக்கள் அருள் பெற்றிருக்கின்றனர் என்பதை இதன் மூலம் உணர முடிகின்றது.

## துணைநூல் பட்டியல்

1. நற்றிணை மூலமும் உரையும், அ. ப. பாலையன், கௌரா பதிப்பகம்
2. பரிபாடல் மூலமும் தெளிவுரையும் புலியூர் கேசியன் உரை, சரண் புக்ஸ், சென்னை.
3. பதிற்றுப்பத்து மூலமும் உரையும், வ. த. ராமசுப்பிரமணியம், திருமகள் நிலையம், விசா பப்ளிகேஷன்ஸ்
4. வாழ்வில் வைணவம், நா. வேணுகோபால் பாரி நிலையம், சென்னை.
5. சிலப்பதிகாரம், புலியூர் கேசிகன் தெளிவுரைவுடன் பாரிநிலையம் சென்னை.
6. தமிழர் நாகரிகமும் பண்பாடும், முனைவர் அ.தட்சிணாமூர்த்தி ஐந்திணை பதிப்பகம் சென்னை.